செ.வெ.எண்: 19 நாள்: 06.02.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 93,750 மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (06.02.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி கூறியதாவது.

பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று தீர்வு காணும் நோக்கத்தில் மாவட்டந்தோறும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் பட்டா மாறுதல் கோரி 6 மனுக்களும், இலவச வீட்டுமனைப்பட்டா கோரி 10 மனுக்களும், புதிய குடும்ப அட்டை கோரி 4 மனுக்களும், காவல்துறை நடவடிக்கைக்காக 7 மனுக்களும், வேலைவாய்ப்பு கோரி 30 மனுக்களும், பசுமைவீடு/சாலைவசதி/குடிநீர்வசதி கோரி 37 மனுக்களும், கல்வி உதவித்தொகை கோரி 5 மனுக்களும், முதியோர் உதவித்தொகை கோரி 10 மனுக்களும், ஆக்கிரமிப்பு அகற்றுதல் தொடர்பாக 7 மனுக்களும், இதர கோரிக்கைக்காக 128 மனுக்களும் என மொத்தம் 244 மனுக்கள் பெறப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இக்கூட்டத்தில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் கிறிஸ்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்களுக்கு 2015-16ம் கல்வியாண்டில் அரசு பொதுத்தேர்வில் 10ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்புகளில் மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெற்ற 17 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் ரூ.6750 மதிப்பிலான காந்தி நினைவு பரிசுத்தொகையும், மாவட்ட வழங்கல் அலுவலகம் சார்பில் 10 நபர்களுக்கு புதிய குடும்ப அட்டைகளும், தாட்கோ மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் விருப்புரிமை நிதியின் கீழ் பால் மாடு வளர்ப்பு மற்றும் மரம் அறுக்கும் இயந்திரம் வாங்குவதற்கு இரண்டு பயனாளிகளுக்கு தலா ரூ.20000 வீதம் ரூ.40000 மதிப்பிலான காசோலை என மொத்தம் ரூ.93,750 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் கூறினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு.செல்வராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினா நலத்துறை அலுவலர் திரு.அன்பழகன், தாட்கோ மேலாளர் திருமதி.முத்துரத்தினம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**